
# ஆத்ம ஜோதி



ஸ்ரீ முருகப்பெருமான்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

சோதி 9 | ஏவிளம்பி௵ ஆவணி௴ 1-ந்உ (15-8-57) | சுடர் 10


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | இணையற்ற கருணைத்தெய்வம் | 289 |
| 2 | வள்ளிமலைவள்ளல்வாழ்த்து | 290 |
| 3 | வள்ளிமலைவள்ளல் | 291 |
| 4 | ஸ்ரீ முருகன் பாதாரவிந்த மகிமை | 295 |
| 5 | யோக ஆசனங்கள் | 297 |
| 6 | தன்னைத்தான் அறிந்துகொள் | 302 |
| 7 | கணபதி ஓம் | 306 |
| 8 | விநாயகப் பெருமான் | 307 |
| 9 | புராணஉலகும் முருகக் கடவுளும் | 309 |
| 10 | அதிசியமனேகமுற்ற பழநிமலை | 313 |
| 11 | கருணை மழைபொழிதெய்வம் | 316 |
| 12 | பாரதிமணிமலர் | 320 |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூபா 75: வருடச்சந்தா ரூபா 3/-
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி [இலங்கை]


# இணையற்ற கருணைத் தெய்வம்

**பல்லவி**

கதிரை மலை ஐயனே! நின்
கருணைக் கிணையுமுண்டோ? துய்யனே! [கதிரை]

**அனுபல்லவி**

கன்னிவள்ளிக் காகஇந்தக்
கானகம்குடிவந்த காதல்மெய்யனே! [கதிரை]

**சரணம்**

அமரர் சிறை மீட்க
அவதரித் திட்ட பாலா!
அடியேனின் கஷ்டமெல்லாம்
அகற்றியே ஆண்ட வேலா! [கதிரை]

முன்னைக்கு முன்னை
முதல்வனும் நீயேயானாய்;
பின்னைக்குப் பின்னை
புதுமையும் நீயேயன்றோ! [கதிரை]

வள்ளிமலைச் சாமிபோன்ற
வித்தரும் ஞானிகளின்
உள்ளத்தில் இருந்தென்றும்
உலகுக்கோர் ஒளியானாய் [கதிரை]

சாதி மத வெறிச்
சண்டைகளற்ற சுத்த
சமரசநிலை காட்டும்
சற்குரு மணியானாய். [கதிரை]

அன்னைபோல் அழைத்துந்தன்
சந்நிதி சாரச் செய்வாய்;
உன்னை நான் தேடிவரும்
உபாயத்தை நீக்கிவிட்டாய். [கதிரை]

"என்னே நின் கருணை!" யென்
றன்னவே முடியாவண்ணம்
என்னிலிருந்தென்னை வேறாய்
எண்ணுவதைப் போக்கிவிட்டாய். [கதிரை]

[க. இ.]

## வள்ளிமலை வள்ளல் வாழ்த்து

சின்னமாம் ஏகதாரை திருக்கையிலேந்தியிந்தச்
சென்னைமாநகரமெங்கும் திருப்புகழென்னுந்தேனைச்
சொன்னமாமாரிபோலச் சுவையமுதொழுகச்சொல்லும்
தன்னை நேரில்லாச்சச்சிதாநந்தன் பதங்கள்போற்றி

பச்சைமால்மருகன்கீர்த்தி பகர்திருப்புகழைநாளும்
இச்சையால் ஓதுநாவன் எம்பிராற் காவியாகும்
இச்சையாள்வள்ளிபாத இருதயன் எங்கள்ஆசான்
சச்சிதாநந்தன்பாதம் சரணமே சரண் எனக்கு.

—வ. சு. செங்கல்வராயபிள்ளை—
[1917-ம் ஆண்டில் இயற்றப்பட்டவை]

புத்தகநல்வடிவுற்ற திருப்புகழ்ப்பா எல்லாமும்
புவியோர் வாக்கில்
சித்தமிசைநிலவும்வகை அவனருளே பெருந்துணையாத்
தேர்ந்து நின்ற
பத்தனுயர் ஞானிபெருந்தொண்டன் மறைப்பேராளன்
பண்பில் ஓங்கும்
சித்தன் வள்ளிமலைச்சாமி இசைகூட்டிப்பாடியெங்கும்
திகழச் செய்தான்.

அருணகிரிமாமுனிவன் அந்நாளில் இவைபாடி
அருளினன் அப்
பெருமகனே இன்று வள்ளிமலைச்சாமியாப்பிறந்து
பெட்பிற் பாடிக்
கருகுமுளம்உருகும்வணம் தமிழ்நிலமெங்கணும்பரப்பிக்
கருணை செய்தான்
அருமைமிக அருமையெனஅன்பரெலாம்கரங்குவிப்ப
அருள்பூத்தானே.

—கி. வா. ஜகந்நாதன்—
[23.3.1957]

—



## வள்ளிமலை வள்ளல்

[ஆசிரியர்]

ஸ்ரீரமணமஹரிஷிகளாலும், அவரது உத்தமசீடரும் ஒத்தவயதினருமான ஸ்ரீ ஈச்வரசுவாமிகளாலும், 'திருப்புகழ்' முருகன்என அழைக்கப்பட்டவரும், இணையற்ற சக்தி உபாசகராக திருவருணையில் வாழ்ந்த ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளிடம் திருப்புகழில் அடங்கியுள்ள மந்திர சக்தியின் மகிமையைக் கேட்டுணர்ந்து, அதனையே மந்திரமாகக்கொண்டு, அவர் கட்டளைப்படி வள்ளிமலையைத் தமது தவநிலையமாகக் கொண்டவரும், திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயருக்கு முருகனாகவே காட்சி கொடுத்தவருமான சுவாமி சச்சிதானந்தரின் நினைவு மலராக ஆத்மஜோதி சோதி 5: சுடர் 9 (இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்) வெளிவந்தபோது, அவரது வரலாற்றை விரிவாக விளக்கும் நூலொன்றை அவரது மெய்யடியார்களுள் ஒருவரான ஸ்ரீ. ஆர். கல்யாணசுந்தரம் ஐயர் எழுதி முடித்தும், அதனை அச்சிட உத்தரவு அந்த மகானிடமிருந்து கிடைக்கவில்லை யெனக் குறிப்பிட்டிருந்தோம். அந்நூல் அண்மையில் "வள்ளிமலை வள்ளல்" என்னும் பெயருடன் அச்சேறிவந்ததுகண்டு மகிழ்ச்சியடைகின்றோம். முருகபக்தர்கள்ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய அரியநூல் இது. தெய்வபக்தி குன்றிவரும் இக்காலத்தில் அதனைத் தங்கள் பிள்ளைகள் படிக்கும்படி தூண்டவேண்டியது பெற்றோர் கடமையாகும்.

வள்ளிமலை வள்ளலின் வரலாறு அற்புதமானது; அதிசயம் அநேகமுற்றது. நாற்பது வயதுமட்டும் எழுத்து வாசனையற்று பரிசாரகர் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவர், வடமொழி, தென்மொழி, இரண்டிலுமுள்ள ஞான இரகசியங்களை, திருப்புகழ்மூலம் கன்னியாகுமரியிலிருந்து கைலாயம் வரைக்கும் எடுத்து விளக்கியதானது இருபதாம் நூற்றாண்டு கண்ட முக்கிய அற்புத சம்பவங்களுள் ஒன்றாகும். தமிழ்மொழியானது தன்னுள் அடங்கியிருக்கும் மந்திர சக்தியால் தன்னை என்றென்றைக்கும் காப்பாற்ற வல்லது என்றபேருண்மை இந்நூலைக்கருத்தூன்றிக்கற்கும் ஒவ்வொரு

வர் உள்ளத்திலும் உதயமாகாமல் இருக்க முடியாது. நம்பால் தேவைப்படுவது முருகபக்தி ஒன்றேயென்பதையும் இந்நூல் உபதேசிக்கின்றது. பக்திகுன்றி பண்பிழந்து, பதங்கெட்டு வாழும் தமிழர்கட்கு இவ்விரு உண்மைகளை விளக்கவே அருணகிரிநாதர் வள்ளிமலைச் சுவாமி சச்சிதானந்தராய் அவதாரஞ் செய்திருக்க வேண்டுமெனக் கூறுதல் மிகையாகாது.

கதிர்காம க்ஷேத்திரமானது மூர்த்தி, தலம் தீர்த்தம் என்னும் மூன்றின் மகிமையால் ஒப்புயர்வற்றது என்ற பிறிதோர் உண்மையையும் வள்ளிமலை வள்ளலின் அநுபவங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. 1912-ம் ஆண்டு ஆடிமாசத்தில் அவர் அங்கு யாத்திரை வரவிரும்பியபோது நாத்திகச்செடியில் ஏற்பட்ட தடைகள் பல. அவற்றையெல்லாம் கதிர்காமக் கந்தன் எவ்விதம் அகற்றி தமது அடியானை அழைத்துவந்தான் என்பதை வாசிக்கும்போது மயிர்க்கூச்சல் வருகின்றது. புத்தி தத்துவம், யுக்தி சாதனையும் மலிந்துள்ள இக்காலத்தில் இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நம்பக்கூடியனவா? ஏற்கத்தக்கனவா? என்றுகூடத்தோன்றலாம். ஆனால், இப்பெரியாரின் பிற்கால அற்புத வாழ்க்கையைத் தொடர்ந்து படிக்கும்போது அவற்றின் உண்மை உதயமாகவே செய்யும்.

**மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.**

என்னும் தாயுமானவர் மணிவாக்கின் உண்மை வள்ளிமலைச் சுவாமிகளின் வாழ்க்கையில் கதிர்காம யாத்திரைக்குப் பின்னரேயே விளக்கம் பெற்றுள்ளது. அங்கு நாற்பது நாள் தவங்கிடந்து தாய்நாடு திரும்பியதும், கோவில் பட்டியில் வாழ்ந்த வேங்கடராயர் என்னும் பக்தரின் உறவு கிடைத்தது. அக்காலத்தில் திருவருணைக்குச் சிறப்பளித்துக் கொண்டிருந்த மும் மூர்த்திகளின் [ரமணர், சேஷாத்ரி சச்சிதானந்தர்] மகிமையை வள்ளிமலைச் சாமிக்கு எடுத்துக்கூறிய பெருமை அப்பக்தரைச் சார்ந்ததாகும். அதனைக் கேட்டதும் அடிகளார் திருவருணைசென்று அருணகிரிநாதரைக் குருவாகவும், மேல்குறிப்பிட்ட மூவரையும் உபகுருமாராகவும்கொண்டு தமது புதுவாழ்வை ஆரம்பித்துக் கொண்டனர். அவர்களது ஆசியுடன் ஏற்றுக்கொண்ட திருப்புகழ்த் தொண்டு முப்பத்தெட்டு வருஷங்களாக பாரத தேசம் முழுவதும் பரவி வந்துள்ளது. கல்



கத்தா, டில்லி, வம்பாய் முதலாய பெரிய நகரங்களில் இன்று நாம் காணும் தமிழ்ப்பணிக்கு வித்திட்டவை அடிகளாரின் திருப்புகழ்ப் பாராயணமும், பிரசங்கங்களுமேயாம். எத்தனையோ சித்திகள் கைவரப் பெற்றும், அடியார் கூட்டம் கடல்போலத் திரண்டும் இந்த மகான் இறுதிவரையில் தம்மை "திருப்புகழடியார் திருவடிச் சென்னியார்" என்று அழைப்பதிலேயே பெருமையுற்றனர். பகவான் ஸ்ரீ ரமண மூர்த்தியின் பெயராலும் நம்சுவாமிகள் பெயராலும் வம்பாயில் நிறுவப்பட்ட 'ரமண சச்சிதானந்த சமாஜத்' தின் 1949-ம் ஆண்டு விழாவுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துப்பாவானது, அவரது ரமணபக்தியை நமக்கு விளக்குவதுடன், உலகுய்ய இவ்வள்ளல் அளித்த உபதேசத்தின் சாரத்தையும் அழகாய்த்தருகின்றது ஆகையால் அப்பாடலைக் கீழே தந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்:-

கருணையே உருவாய்க் காசினி வந்து
குருபர னாகக் குலவிதன் நோக்கால்
உலகோர் ஊழ்வினை ஒழிக்குங் குருமணி
நன்னலம் புரியும் ஞானப்ர காசன்
இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன்
அசற விளங்கும் மாசிலா ரத்னம்
வேங்கட ரமண விமலமெய்ஞ் ஞானியின்
திருப்புக ழதனை விருப்புட னோதிப்
பரகதி நாடும் பக்தர்கள் சேர்ந்த
சீரார் ரமண சச்சிதா நந்த
சமாஜ அன்பர்க்குத் தக்கதோர் மொழி
திருப்புக ழடியார் திருவடிச் சென்னியார்
தெரிப்பது யாதெனில் செப்புவல் கேண்மோ!
"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை
இடுங்கோள் தானம் இருங்கோள் இருந்த
படியே" என்பர் 'எங்குரு நாதர்'
இருநில மதனில் இறைவன் புகழே
மிகுதல் வேண்டும் என்பர் அவர்குரு

(அகவல்)

ஒருமை மனத்துடன் சாந்தி நிலைதழீஇக்
கரவா திட்டு வடிவே லிறைதாள்
நினைந்து நினைந்து நன்னெறி படர்ந்தே
ஈசன் புகழையும் ஈசன் அடியார்
தம்புக ழதனையும் தலந்தொறும் பரப்புமின்!
இதுவே தரும மெனநீர் கொண்மின்!
எண்ணரும் சகல இன்பமும் கூடித்
தரணியில் வாழ்தல் சரதம் சரதமே.

[எங்குருநாதர்: அருணகிரிநாதா. அவர்குரு: சம்பந்தமூர்த்தி]

ஞானத் தருணகிரி நாதர் கவிமழையின்
தான முகிலாந் தனிசச்சி — தானந்தா
தேனூறுந் தெய்வத் திருப்புகழின் கீதமினி
வானோருங் கேட்பர் மகிழ்ந்து.

—ஸ்ரீ சச்வரசுவாமிகள்—

[அடிகளார் மகாசமாதியின் பின் பாடப்பெற்றது]



காந்தம் இரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா!
சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா

(ரமணமஹரிஷி)



# ஸ்ரீ முருகன் பாதார விந்த மகிமை

ரணத்தம்ஸகே மஞ்ஜுலே அத்யந்தசோணே
மனோஹாரி லாவண்யபீயூஷபூர்ணே
மந: ஷட்பதோ மே பவக்லேசதப்த:
ஸதாமோததாம் ஸ்கந்த தே பாதபத்மே

(சங்கரர்)

சந்திக்கின்ற அன்னங்களோடு கூடினதாயும் மிகவும் சிவப்பு வர்ணமுள்ளதாயும் மனதைக் கவருகின்ற லாவண்யமென்ற அமிர்தத்தால் நிறைந்ததாயும் அழகாயுமுள்ள உன்னுடைய பாதங்களாகிற தாமரைப் புஷ்பத்தில், சம்சாரதாபத்தால் தவிக்கும்படி செய்யப்பட்ட என்னுடையமனமாகிய வண்டானது, சுப்ரமணிய மூர்த்தியே! எப்பொழுதும் சஞ்சரிக்கும் காரணத்தால் சந்தோஷத்தை அடையட்டும்.

**பொருள்:—** செந்தாமரைப் பூவில் அன்னப்பட்சிகள் எப்பொழுதும் சஞ்சரிக்கும்சுவாபமுள்ளவைகள். எப்பொழுதும் திவ்யமான சப்தங்களாலும் கேட்போருடைய மனதை ஆனந்திக்கச் செய்துகொண்டிருக்கின்றன. அந்தத் தாமரைப் பூவில் தேனை உண்டுபண்ணுவதற்குக் காரணமான திவ்ய ரசம் நிரம்பி இருக்கும் காரணத்தால் **ஷட்பதம்** என்று சொல்லப்பட்ட வண்டுகளும அந்தச் செந்தாமரையில் வருகிற வழக்கம் உண்டு. செந்தாமரையில் வந்து ரசத்தை இஷ்டப்படி குடித்துவிட்டு, மிகவும் சந்தோஷத்துடன் வண்டுகளும் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும். இதைத் திருஷ்டாந்தமாக வைத்துக் கொண்டு சங்கரர் சுப்ரமணிய சுவாமியினுடைய பாதத்தைத் துதிக்கின்றார். பகவானுடைய பாதங்களோ செந்தாமரைப் புஷ்பம்போல இயற்கையிலேயே சிவந்த நிறத்துடன் விளங்கிவருகின்றன. தாமரைப்பூவில் அன்னப்பறவைகள் வசிப்பதுபோல சுப்ரமணிய சுவாமியினுடைய பாதங்களாகிய தாமரைப் பூவில் பரமஹம்சர்கள் என்று சொல்லப்படும் அனேக சந்நியாசிகள் நின்று வருகின்றார்கள். பிரசித்தமான தாமரைப்பூவில் கேவலம் ஹம்சபட்சிகள் பானம் செய்கின்றன. சுப்பிரமணியசுவாமியினுடைய பாதாரவிந்தங்களிலோ பரமஹம்சர்கள் என்கின்ற ஜீவன்முக்தர்கள் வாசம் செய்கிறார்கள். பிரசித்தமான தாமரைப் பூவிலும் தேனிருக்கும் வழக்கமுண்டு. பக

வானுடைய பாத புஷ்பங்களிலோ பார்ப்பவர்களுடைய மனதை அபகரிக்கக்கூடிய சௌந்தர்யமாகிற அமிர்தம்நிரம்பியிருக்கிறது. அந்தத் தாமரைப்பூவில் வண்டுகள் ரசத்தை நிரகிக்கவந்து வாசம் செய்வதுபோல சங்கராச்சாரியார் தம்முடைய மனதை ஒரு வண்டாகப்பாவித்து, வண்டுகளுக்கு ஆறுகால்கள் உள்ளதுபோல், தம் மனதிற்கும் சமம், தமம், திதிட்சை, உபாதி, சிரத்தை, சமாதானம் என்ற ஆறுகுணங்கள் நிறைந்திருப்பதால் ஆறுகால் வண்டிற்குச் சமானமாக ஆகலாம் என்று நினைத்து பகவானுடைய பாதாரவிந்தங்களில் எப்பொழுதும் வாசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்டுக் கொள்ளுகின்றார்கள். சம்சாரமாகிய காட்டுத்தீயினால் எப்பொழுதும் தப்பிக்கும்படி செய்யப்பட்ட என்மனதாகிற வண்டிற்கு உன்னுடைய சரணாரவிந்தங்களில் பானம் செய்வதால் தாபத்திற்குச் சாந்தி ஏற்பட்டு பரமசந்தோஷத்துடன் ஜீவிக்கும் உன் பாதாரவிந்தத்தின் சமீபத்திலோ, பரமஹம்சர்களான சந்நியாசிகள் எப்பொழும் சஞ்சாரம் செய்துகொண்டு மகாவாக்கியத்தை உச்சரித்துக்கொண்டு இருக்கின்றார்கள், அதைக்கேட்பதினாலும்என்மனதிற்கு ஒரு சந்தோஷம்ஏற்படக்கூடும். ஆகையால்என் மனதாகிற வண்டானது எப்பொழுதும் உன்சரணாரவிந்தங்களில் வாசம் செய்யட்டும் என்றும் ஆசாரியார் பிரார்த்திக்கின்றார். இதனால் பகவானுடைய பாதசமீபத்தில் சிரவணேந்திரியத்தை மனதுடன் செலுத்தி கவனித்தவர்களுக்கு பகவானுடைய பாதாரவிந்தத்திற்குள், அந்தர்பாவத்தையடைந்த பரமஹம்சர்கள் உச்சரித்துக் கொண்டிருக்கும் பிரணவசப்தமும், மகாவாக்கியத் தொனியும் கேட்கலாம் என்பது வெளியாகிறது.

மரத்தின் அடியில் சிதறுண்டிருக்கும் அற்ப நிலாப்போன்றது மனிதரின் நித்திரையில் உள்ள சுகம்; தடைபடாத நிறைந்த நிலாப் போன்றது ஜீவன்முத்தனுடைய இயற்கையான சுகம்,

—ரமணமகரிஷிகள்—




# யோக ஆசனங்கள்

(S. A. P. சிவலிங்கம், ஞானகுரு யோகாசனசாலை, சேலம்.)

## 34, பிராணாசனம்
### [ஆரம்பிக்கும் விதம்]

காற்றோட்டமானதும், சுத்தமானதுமான இடத்தில் சமதள விரிப்பின்மேல் பத்மாசனம் செய்து அவயவங்களை விறைப்பின்றிச் செய்துகொள்ளவும்.



பின்விரிப்பின்மேல் கால்களை நீட்டியுட்காரவும். இடதுகாலை வலது தொடையின் மேல் இரண்டு கைகளாலும் பிடித்து வைக்கவும். இடது குதிக்கால் அடிவயிற்றைச் சேர்ந்தாற்போல் இருத்தல் வேண்டும்.

பின் வலது முழங்காலை மேலுயர்த்தி பாதத்தை அருகில் கொண்டுவரவும். வலது கையை வலதுகால் முழங்கால் சந்தில் நுழைத்து வலதுகாலை பின்னி அக்காலின்பாத விரல்களின் அருகில் வலதுகைச் சுண்டுவிரல் படும் வண்ணம் பூமியில் படியவைக்கவும்.

இந்நிலையில் இடப்பாதத்தின் முழங்கால்கீழே நன்கு படிந்திருக்கவும். இடதுகை கீழே உள்ளங்கை படியும் வண்ணம் ஊன்றியிருத்தல் வேண்டும். மார்பு, முகம், தலை நேராய் நிமிர்ந்திருத்தல்வேண்டும், சுவாசம் சமநிலையிலோ அல்லது அவரவர்கள் சவுகரியத்துக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளலாம்.

சாதாரணமாய்ச் சில விநாடிகளிருந்தபின் ஆசனத்தைக்கழற்றி மறுபடியும் செய்யலாம். சித்திரம் 34. பார்க்கவும். முதுகு நேராக இருக்கவும்.

## ஆசனத்தைக் கலைக்கும் விதம்.

சுவாசம் முழுவதும் வெளிவிட்டுப் பின் வலதுகையை எடுத்து வலதுகாலை நீட்டி, இடதுகாலை எடுத்து இடதுகையைக் கீழே யூன்றியிருப்பதை எடுத்தும், தளர்ச்சி செய்து மல்லாந்துபடுத்துச் சிறிதுநேரம் சிரமபரிகாரம்செய்து கொள்ளவும்.

கால்களை மாற்றி மாற்றிச் செய்யவும். உடலுக்குத்தக்கவாறு பலதடவைகள் செய்யவும்.

**பலன்கள்:-** ஹெர்னியா என்னும் குடற் பிதுக்கத்தைக் குணப்படுத்தும். அசீரணக்கோளாறுகளை நீக்குகின்றது. சீரணத்தை யதிகரிக்கச் செய்கின்றது. கால்களின் தொடைகள், பாதங்கள், கைகள், வயிறு இவைகள் நன்கு கசக்கப்படுவதால் அப்பாகங்களுக்கு நல்ல வீரியத்தையும், இரத்தோட்டத்தையும் கொடுத்து நீண்ட ஆரோக்கியமடையச் செய்கின்றது.

## 35, ஏகஹஸ்த புஜாசனம்
### (பழகும் நிலை)

காற்றோட்டம், சுத்தம், ஆரோக்கியம், முதலியன உள்ள இடத்தில் சமதள விரிப்பின்மேல் கால்களிரண்டையும் நீட்டியுட்காரவும். இடதுகாலை மடக்கி மேல்தூக்கி வலதுகாலைமடக்கி பாதம் இடது தொடையின்கீழ் ஆண்குறிப்பக்கம் தொடும் வண்ணமமர்த்தவும்.

இடதுகாலை இரண்டுகைகளாலும் பிடித்து மேல்தூக்கி இடது தோளின்மேல் வைக்கவும். பின் இடதுகையை இடது முழங்கால் சந்தில் செலுத்தி கழுத்தின் பின்பக்கம்கொண்டுவந்து வலதுகையை வலப்பக்கமாய் மடக்கி பின்பக்கம் கொண்டுவந்து இரண்டு கைகளையும் கோர்த்துக் கொள்ளவும்.

இடதுகாலின் முழங்கால் நன்றாகக் கீழே படிந்திருக்கவும். முதுகு, தலைநேராய் நிமிர்ந்திருக்கவும். வளையக்கூடாது. மார்பு நேராய் இருக்கவும். இந்நிலை சித்திரம் 35. பார்க்கவும். ஆசனத்தைத் தேவைக்குத்தக்கவாறு இருந்தபின் கலைத்து வலதுகாலையும் செய்யவும்.



## ஆசனத்தைக் கழற்றும் விதம்



கோர்த்திருக்கும் இரண்டு கைகளையும் எடுத்து, வலதுகாலை வலதுகையின் தோளின்மேலிருப்பதையும் எடுத்து, பின் இடது காலையும் எடுக்கவும். இவ்விரண்டு கால்களையும் சமதளவிரிப்பில்நீட்டி மல்லாந்து படுத்து சிரமபரிகாரம்செய்துகொண்டு மீண்டும் உடலுக்குத் தக்கவாறு செய்யவும்.

நேயர்களுக்கு சற்று கடினமான ஆசனம். "உடலும், மனமும் ஒருங்கே யமைந்தால் உள்ளத்தையறியலாம்" எனும் பழமொழிப்படி மனத்தை ஒருமைப் படுத்தி ஆசனத்திலேயே லயிக்கச் செய்து வரவும்.

**பலன்கள்:-** குடல் பிதுக்கம் என்னும் ஹெர்ணியா வியாதி பூரணகுணமாகும். அத்துடன் முன் பிராணாசனத்தின் பலனைக் கொடுக்கும்.

தொடைகள், கழுத்து. கைவிரல்கள் இவைகளுக்கு நல்ல இரத்தோட்டத்தையும் கொடுத்து ஜீரணசக்தியையதிகரிக்கச் செய்து, மலஜலம சுலபமாய் வெளியேறும்.

கால்களை மாற்றிமாற்றிச் செய்யவும், நான்கைந்து தட்வை விதம் உயர்த்திக்கொண்டுபோகலாம்.

# 36, சதுரகோணாசனம்

## [ஆரம்பிக்கும்விதம்]

காற்றோட்டமானதும், சுத்தமானதுமான சமதள விரிப்பின் மேல் பத்மாசனம், தாடாசனம் செய்து அவயவங்களை இளக்கிக் கொள்ளவும்.



பின் விரிப்பின்மேல் இரண்டு கால்களையும் நீட்டிச் சாதாரணமாய் உட்காரவும். பின் இடதுகாலை மடித்து பாதத்தை மண்டியிட்டவாறு பின்பக்கம் கொணர்ந்து முன் பாதத்தின்கணுக்கால், பாதத்தின் மேல்பாகம் பூமியில் நன்கு படிந்திருக்கும் வண்ணம் அமர்த்தவும்.

விறைப்பாய் இருக்குமாறு காலையமர்த்தவும். நீட்டியிருக்கப்பட்ட வலக்காலின் முழங்காலை மேனுயர்த்தி வலதுகையால் வலதுகாலின் கணுக்கால் மூட்டு, வலது முழங்கையில் அமர்ந்திருக்கும் வண்ணம் மேலே தூக்கி இடதுகையைப் பின்பக்கம் தலைப்பக்கமாய் கொண்டுவந்து வலதுகையுடன் கோர்த்துக் கொள்ளவும். இடதுகை காதோரமாயிருக்கவேண்டும். முதுகு, மார்பு, முகம்நேராய் இருத்தல்வேண்டும். முகம் நேர் பார்வையாய் இருத்தல் வேண்டும்.

இந்நிலை சித்திரம் 36, பார்க்கவும். வலது பாதத்தின் பெருவிரல் தாடையைத் தொடும் வண்ணம் இருத்தல் வேண்டும். வலது குதிக்கால் மார்பை யொட்டியிருக்கவும். சுவாசம் சமநிலையில் இருக்கவேண்டும்.



## ஆசனத்தைக் கலைக்கும் விதம்

கோர்த்திருக்கும் இரண்டு கைகளையும் எடுத்து பின் வலதுகாலை எடுத்து நீட்டி, இடதுகாலையும் எடுத்து நீட்டி மல்லாந்து படுத்துச் சிரமபரிகாரம் செய்து கொண்டு மீண்டும் செய்யலாம். இவ்வாறே மற்றக்காலையும் செய்யவும். அவரவர்கள் உடல்நிலைக்குத் தக்கவாறு ஆசனம் செய்யும் தடவையை உயர்த்திக் கொள்ளவும்.

**பலன்கள்:-** முழங்கால், கணுக்கால் வாதமென்னும், நரம்பு வீக்கம் முதலியவற்றைச் சொஸ்தப்படுத்தும். அத்துடன் கால்கள், கைகள், கழுத்து இவைகளுக்கு வலுவையும் கொடுத்து, மார்புக்கு நல்ல ஆரோக்கியத்தையுண்டுபண்ணும். சென்ற ஏஹஸ்த புஜாசனத்தின் பலனையும் தரும்.

*வயிறு முழங்கையால் உள் அழுந்தியிருப்பதால் ஜீரணசக்தியை யுண்டுபண்ணி நல்ல பசியை யுண்டாக்கும்.



குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத் துறை.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

# தன்னைத்தான் அறிந்து கொள்க

[சுவாமி சிவானந்தர் ரிஷிகேசம்]

—●—

தேடி அலைகின்றவனே! எதைத் தேடுகின்றாய் என்பதை அறிந்துகொண்டு தேடு. நீ இங்கு பின்பற்றிச் செல்வது நீ உண்மையாக வேண்டுவதை கொடுக்கத் தவறுகின்றதென்பதும் கானல் நீர் போல் பின்னோக்கி போகின்றதென்பதும் உனக்குத் தெரியவில்லையா? இவ்வுலகத்தைச் சார்ந்த எதுவும் உனக்கு மேன்மையான சந்தோஷத்தையும், நித்தியமான சுகத்தையும், கலப்பற்ற ஆனந்தத்தையும் தரக்கூடியதல்ல. இளமை மாலையில் மலரும் புஷ்பத்தைப் போல் வாடும். வலிமை சிதறிய மேகத்தைப்போல் மறையும். தேக அழகு குரூர மாணத்திற்குச் சீக்கிரமாக இடமளிக்கும்.

உன்னுடைய இன்ப ஊற்றுக்கள் ஏளனம் செய்கின்றன. ஏனென்றால் நீ தவறாக துன்பத்தை இன்பமாகவும், இரவைப் பகலாகவும், கானலை நீராகவும், கருதிவிட்டாய். உன்னுடைய வேட்கையின் மெய்யான நோக்கம், நீ நாடும் உண்மைப் பொருள், எது இல்லாமல் நீ நிம்மதியாயிருக்க முடியவில்லையோ அந்த பொக்கிஷம், இங்கு எதற்காக உன் வாழ்க்கையை நடத்திவருகின்றாயோ அந்த ஒருகுறிக்கோள் அகத்தேயுள்ள கடவுட்தத்துவத்தின் அழியா ஆனந்தத்தை அடைதலாகும்.

உன் வாழ்க்கையை எங்கும் நிறைந்திருக்கும் நிரந்தரமான பொருள் அதாவது ஆத்மா என்று நிலைபெறச் செய். வேறு எல்லாப் பேச்சையும் நிறுத்து. வேறு எவ் வேலைகளையும் விடு. ஆதியும் அந்தமுமில்லா அளவிட முடியாத பரம் பொருளின் கம்பீரமான வாயிற் கதவை சிறக்கும் சிந்தனையைத்தவிர மற்ற யாவற்றையும் விட்டு நீ விலகிக்கொள். உண்மையாகவும் பொறுமையுடனும் இரு. உன்னால் உண்மையாகத் தேடப்படும் நிலை பெற்ற பொருளை நீ சென்றடைவாய்.

வேலைசெய், பணிசெய், அன்புசெய், கொடு, ஏனென்றால் நீ காலத்தால் கொள்ளப்படாததும், யமனால் கவர்ந்து செல்லப்படா



ததும், மாறுதலாலும், நிலைபெறாமையாலும் அசைக்கப்படாததுமான ஒன்று எங்குளது என்று அறியவேட்கை யுடையவனாயிருக்கிறாய். கோரோஜனையின் சுகந்தத்தை அனுபவிக்க ஓடும் கவரிமான் நீ. நிலை பெற்ற பொருள் உனக்கு வெளியே தூரத்தில் இருக்கின்றது என்னும் எண்ணம் உன்னை ஏமாற்றுகிறது. புத்தியின் கதவை மூடு. இந்திரியங்களின் சாளரங்களை அடைத்துவிடு. இருதய உள்ளிற்குச் செல். நிர்வானத்தின் தூங்கா தூக்கத்தை அனுபவி. நீ ஆசிபெற்றவன். உன் ஒரே கடமை கடவுளை அடைவதுதான். உன் உள்ளும் மற்று எங்குமுள்ள ஆத்மாவை அடைவதுவே உனக்கு வேறு கடமைகிடையாது. இக்கடமையை நிறைவேற்ற நீ பிறந்திருக்கிறாய். மற்றெல்லாக் கடமைகளும் இக்கடமையில் அடங்கும்; இக்கடமை இல்லையென்றால் மற்றவையாவும் குழந்தையின் விளையாட்டே. இதை ஞாபகத்தில்வை.

வாழ்வின் இவ்வுன்னதமான குறிக்கோளிற் குகந்த வாழ்க்கையை நடத்து. ஆத்மா ஒன்றே உளது. ஆகவே எல்லோரிடத்தும் சமமான அன்பு பாராட்டு. ஆத்மா ஒன்றே உளது; ஆகவே சுயநலம் கருதாது யாவர்க்கும் பணிசெய். ஆத்மா ஒன்றே உளது ஆகவே இவ்வுண்மைக்கு விரோதமாக உள்ள அளவுக்கு மீறிய இந்திரியானுபவங்களையும் காமத்தையும், லோபத்தையும், கோபத்தையும் தணித்துக்கொள். ஆத்மா ஒன்றே உள்ளது; இவ்வுண்மையை நிராகரிக்கும், பெயர், புகழ் அதிகாரம், செல்வம் ஆகிய இவை மேற்கொண்ட ஆசைகளிலிருந்தும். ஆவல்களிலிருந்தும் விலகிக் கொள். அகண்டாகார ஆத்மாவை தியானம் செய்.

உங்கள் எல்லோருக்கும் இது உண்மையின் ஆக்ஞை பூரண அனுபவத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுக்கும் ஆக்ஞை. நிரந்தரமான மதிப்புள்ள போதனைகளைப் பின்பற்றிவருபவராலும் தெய்விக வாழ்க்கையை நடத்தி வருகின்றவராலும் இவ் ஆக்ஞை கேட்கப் பட்டுள்ளத. பண்டைய ஞானிகளதும், ரிஷிகளதும், அறைகூவலை மறுபடியும் கவனி. மிருகங்களைப்போல்நடவாதே; ஏனென்றால் தெய்வீகம் உனது பிறப்புரிமை. அவ்வழியாத் தனிப்பொருளின் அன்பில் உருகிவிடுங்கள். அப்பெருமுடிவின் அத்யாவசிய சாதனங்களாகிய சத்துவகட்டுப் பாட்டுடன் கூடிய வாழ்க்கையை நடத்துங்கள்.

இவ்வுலகத்தின் ஒளியும் உயிருமான இவ்வுண்மையின் போதகர்களாவீர்களாக. பூரண பக்குவ மடைதலே தனிப் பட்ட நோக்கமென்பதும், அதை அகத்துள்ள ஆத்ம அறிவு மூலமாக அடைய முடியும் என்கிற இவ்வுண்மையை உங்களுக்குள் சிந்தனை செய்யுங்கள்.

## தீமைக்குப்பதில் நன்மை

தீமைக்குப் பதில் தீமையோ அல்லது நன்மைக் கைம்மாருக நன்மையோ செய்வதுஎளிது. ஆனால் தீமைக்கு பதிலாகநன்மையே செய்வது வெகு கஷ்டம். ஏனெனில் தீயமுறையில் செல்லும் பாதையில் நடப்பது எவ்வளவு சுலபமோ, அவ்வளவுக்கு நல்முறையில் நடப்பது மிகப்பிரயாசையான காரியம். ஆனால் அவ்விதம் தீமைக்கு பதிலாக நன்மையே செய்யக்கூடியவர் மிகப்புனிதமானவர். அவரை தெய்வமெனவும் கூறலாம். ஆகவே நம் கடமை பிறர்க்கு நன்மைசெய்வதே. ஒரு சாது ஓடும் நீரோடையில் விழுந்த தேள் ஒன்றை காப்பாற்றமுயன்றார். இரண்டுமுறை தேள் தன்னை தீண்டிவிட்டபோதிலும், மூன்றும் முறை அதனைக்கரையேற்றிவிட்டார். இச்சாதுவின் செயல்கண்டு வியந்த மக்களுக்கு அவர் "சிற்றறிவு கொண்டதேள் நம்மை தீண்டியக்காலும் உயர்ந்த அறிவு படைத்த மானிடர் அதை புறக்கணிப்பது கீழ்மையாகும்" எனக் கூறினர் இதுவன்றோ உண்மை சக்தி.

## சிந்தாந்தர் பாதுஷா

சுகபோகங்களிலேயே காலங்கழித்துவந்த சிகந்தர் பாதுஷா ஒருநாள் சிந்திக்கலானன். தகுதியற்ற முறைகளில் என் வாழ்நாள் வீணாயிற்று. இன்று என் உடல் வாடி, உணர்ச்சி குன்றி செயலற்றவனாயினேன். இருந்தபோதிலும், உலகோர்க்கு ஒரு நற்புத்தி புகட்ட வேண்டும் என்று தேர்ந்து, ஒரு ஊர்வலம் ஏற்பாடுசெய்தனன். தனமும் பொருளும் சுமந்த கரி, பரிகள் ஊர்வலத்தின்



தலைமையில் சென்றன. சிக்கந்தரின் நான்கு வைத்தியர் தன்னை பின்தொடர, தன் சுற்றத்தவரின்பின் தன் கைகளை விரித்தவண்ணம் நடந்தான் பாதுஷா. இக்காட்சியைக் கண்டோர் பாதுஷா அறிவிழந்து விட்டாரென்று முடிவு கட்டி விட்டனர். ஆனால் உண்மை அதுவல்ல. அக்கோலத்தில் ஒரு படிப்பினை இருந்தது. அஃதாவது "உலகம் சதமல்ல. செல்வம் நிலையா. வைத்தியர் மக்களை மரணத்தினின்று காப்பாற்ற முடியாது. சுற்றத்தவரோ சுயநலம் கொண்டவர். வெறுங்கையோடு உலகத்தில் புகுந்தோடி, வெறுங்கையோடு அதைவிட்டு நீங்கவேண்டும்" என்பதாம். எவ்வளவு உயர்ந்த போதனை, பாதுஷா கண்பித்தது.



வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

## கணபதி ஓம்

[பரமகம்சதாசன்]

| | | | |
|---|---|---|---|
| கணபதி | ஓம் ஜய | கணபதி ஓம் | |
| கஜமுக | வைங்கர | கணபதி ஓம் | |
| குணபதி | யாம் சிவ | கணபதி ஓம் | |
| குண்டலி . | மண்டல | கணபதி ஓம் | [கண] |
| மூஷிக | வாகன | கணபதி ஓம் | |
| மூலப் | பிரணவ | கணபதி ஓம் | |
| மாசறு | தேசிக | கணபதி ஓம் | |
| வல்லபை | மோகன | கணபதி ஓம் | [கண] |
| விக்ன | விநாயக | கணபதி ஓம் | |
| விகசித | நகைமுக | கணபதி ஓம் | |
| உக்ர | தபோபல | கணபதி ஓம் | |
| ஊர்த்துவ | நர்த்தன | கணபதி ஓம் | [கண] |
| பார்வதி | பால | கணபதி ஓம் | |
| பரசிவ | ஞான | கணபதி ஓம் | |
| பூர்ண | வியாபக | கணபதி ஓம் | |
| புவன | புரந்தர | கணபதி ஓம் | [கண] |
| சுத்த | சதாசிவ | சணபதி ஓம் | |
| சுந்தர | குஞ்சர | கணபதி ஓம் | |
| நித்திய | தத்துவ | கணபதி ஓம் | |
| நின்மல | சின்மய | கணபதி ஓம் | [கண] |



## விநாயகப்பெருமான்.

[காமகோடி]

விநாயகசதுர்த்தி வருகிறது. சைவ நன்மக்கள் அனைவருக்கும் இது ஒரு நன்னாள். விநாயக சதுர்த்தி நன்னாள் மட்டுமல்ல; நன்னாளெவற்றிற்கும் முன்னாளாகவும் விளங்குகின்றது. விநாயகரை வழிபடுவதோ எளிது. ஆனால் அவரால் பெறக்கூடும் வரமோ பெரிதினும் பெரிது. விநாயகர் பூஜையால் ஔவையார் போன்ற பெருமக்கள் பெற்ற பெருமைக்கு எல்லையுமுண்டோ? எதைத் தொடங்கினும் விநாயகரைப் போற்றிக்கொண்டு தொடங்குவது நமது முன்னோர் முறைமை.

வீடுகள்தோறும் பிள்ளையாருக்கென ஒரு மாடமும், அதில் பிள்ளையார் மனையென ஒரு பீடமும் உண்டு. அம்மூர்த்தியைவணங்காமல் மனைமக்கள் எதையுந் தொடங்குவதே கிடையாது. "வேழமுகத்துவிநாயகனைத் தொழவாழ்வு மிகுந்துவரும்." வெள்ளைக் கொம்பன் ஐங்கரனைத் தொழ துள்ளியோடுந் தீவினைகளே. இது போன்ற சூத்திரங்களாற் பள்ளிக்குச் செல்லுங் குழந்தைகளும் பாடிப் பரவுவார்கள், விநாயக மூர்த்தியின் தத்துவம்பெரிது. ஆன்றோர்கள் ஓங்காரத்துருவத்தையே அவரது திருமேனியாகக் கண்டு போற்றி வந்திருக்கின்றார்கள்.


ஓங்காரம் உருண்டதோற்றமுடையது. உலகமும் உருண்டை வடிவுடையது. எனவே ஓங்காரமே உலகம்; உலகமே ஓங்காரம். ஓங்கார உருவினராகிய விநாயக மூர்த்தியைத் தொழுது வணங்கிய பின், எதையுந் தொடங்குவதின் கருத்து யாதெனில், அகண்ட உலகத்தையும் வணங்கி, உலகத்தின் நடையைத் தனக்கு முன்னதாகக்கொண்டு, அதற்கடங்கித்தான் பின்நடந்து உலகம் வாழ்ந்தால் தான் தான்வாழமுடியும் என்பதை மறவாமல் "நாடெங்கும்வாழக் கேடொன்றும் இல்லை" யென்ற நல்லெண்ணத்தை நாள்தோறும் வளர்த்திக் கொள்வதேயாகும்.

தன்வழக்கு வெல்லவும், எதிரிவழக்குத் தோற்கவும் வேண்டி பிள்ளையாருக்குப் பெரும் பூஜை செய்யும் பேதைமக்களும் உண்டு.

நன்மைக்குக் கடவுளை நாடலாம். ஒருவரைக் கெடுக்கவா கடவுளைத் தேடுவது? அது அவர்கள் அறியாமையெனத் தள்ளுவதைவிட்டு மூதோர் முறையெனக் கொள்வது குணமல்ல.

“பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு நக்கு நிற்பனவர்தமை நாணியே” என்பது உண்மை உரை. ஆகவே, தொன்று தொட்டு வழங்கும் முதற் பெருந் திருநாளான சதுர்த்தி விழாவை நன்கு நடத்தி, மழையும், மாடும், விளைவும், வீடும், அறமும், அருளும் ஓங்க அமலனைப் பரவுவோமாக.

**அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த**
**தொல்லைபோம் போகத் துயர்போம் — நல்ல**
**குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்**
**கணபதியைக் கைதொழுதக் கால்.**



உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.



# புராண உலகும் முருகக் கடவுளும்.

(திரு. வி. கலியாணசுந்தரனார்.)

புத்தர் ஜாதகக் கதைகள் தோன்றிய காலந்தொட்டு, நமது நாட்டில் புராணங்களும் தோன்றலாயின. தத்துவ நுட்பங்களை மக்கள் எளிதில் உணருமாறு கதை வடிவாக எழுதப்பட்ட நூல்களே இப்புராணங்கள்.

ஆண்டவன்பால் பிரிவின்றி அவனது அருள் பொலிகிறது. ஆண்டவனை ஆணாகவும், அவனது அருளைப் பெண்ணாகவும் கொள்வது நமது நாட்டு வழக்கம். இவ்வழக்கை யொட்டிப்புலவர் “உமை நங்கையோர் பங்குடையாய்” என்று பாடுவர். இதன் கருத்தென்னை? ‘அருளோடு கூடிய ஆண்டவனே’ என்பது கருத்து. "அருளது சத்தியாகும்" என்று ஞான சாத்திரம் நவில்கிறது. ஆண்டவனையும், அவனது அருளையும் புராணம் வேறு முறையில் கூறும். முறையில் வேறுபாடிருக்கிறதே யன்றிக் கருத்தில் வேறுபாடில்லை. ஆண்டவனையும், அருளையும் முறையே தலைவன் தலைவியாகக் கொண்டு, புராணம், திருமணம் - விளையாட்டு, முதலிய படலங்கள் வகுத்துக் கதைகளாக உருவகஞ் செய்து, அணிபெறக் கூறும். ஆகவே புராணங் கூறுவதை அங்ஙனமே பருமையாகக் கோடலாகாது. அங்ஙனங் கொள்வோருமுளர். அவர் மதமே "பௌராணிகம்" என்பது.

முருகனைப் பற்றிக் கூறும் புராணங்கள் பல. அவைகளுள் தலையாயது மஹாஸ்காந்தம். இப்புராணத்தின் ஒரு கூறு கச்சியப்ப சிவாச்சாரியரால் தமிழில் பாடப்பட்டிருக்கிறது. இதுவே தமிழ்க் கந்தபுராணமென்பது. இப்புராணத்துக்கு வழி சார்புகளாகச் சில நூல்கள் செய்யப்பட்டன. ஈண்டு எடுத்துக் காட்டிற்குந் தமிழ்க் கந்தபுராணத்தையே கொள்கிறேன்.

தமிழ்க் கந்த புராணத்துக்கும் முற்றும் உட்பொருள் கூற யான் புகுகிறேனில்லை. பானைசோற்றிற்கு ஒருசோறு பதம் பார்த்தல் என்னும் முறை (தாலி புலாக நியாயம்) பற்றி இரண்டொன்று எடுத்துக் காட்டல் சாலும். முதலாவதாக முருகன் தோற்றத்தை மட்டுஞ் சிறிது ஆராய்வோம்.

இதை ஆராய்ந்தாலும் முருகன் இயற்கை முதல்வன் என்பது புலப்படும். புராணக் கதையின் உள்ளுறையையோராது வாயில் வந்தவாறு பிதற்றுவது அறியாமை. உலகில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறக்கும் குழந்தை போல், சிவனுக்கும், உமைக்கும் முருகன் பிறந்தான் என்று கருதுவோர் மிக்க கீழ் நிலையிலிருப்போர். இவர் புராணக்கதைகளை உள்ளவாறே நம்புவோர். எங்கும் நிறைந்துள்ள முருகுயாண்டுத் தோன்றும்? யாண்டு ஒடுங்கும்.

**கந்தரநு பூதி பெற்றுக் கந்தரநு பூதி சொற்ற**
**எந்தை அருணடி யிருக்கு நாள்எந் நாளோ**

என்று வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் செல்வராகிய தாயுமானுர் வழுத்திய அருணகிரிநாதர்,

‘காணொணாதது உருவோடருவது, பேசொணாதது
உரையே தருவது,
காணு நான்மறை முடிவாய் நிறைவது – பஞ்சபூதங்
காய பாசம தனிலே யுறைவது, மாயமாயுட லறியா வகையது’
‘சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமய வடிவாய் வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய் நின்ற நிட்கள சொரூப முதலொருவாழ்வே.
துரிய நிலை யேகண்ட முத்தரிதயாகமலம்
அதனில் விளை யாநின்ற அற்புத சுபோத சுக
சுயபடிக மாவின்ப பத்மபதமே அடைய உணராதே.’
‘போத நிர்க்குண போதா நமோ நம
நாத நிஷ்கள நாதா நமோ நம’

என்று போற்றிய ஒரு பொருளே தோற்றக் கேடுடையதாகும்? இயற்கை மணமுடையான், மாறு இளமை யுடையான், கடவுட்டன்மை யுடையான், அழியா அழகுடையான். எம்பெருமான் முருகனே எல்லாம்; அவனே சிவன்; அவனே திருமால்; அவனே யெல்லாம்.

‘ஐந்து பூதமு மாறு சமயமு
மந்திர வேதபு ராண கலைகளும்
ஐம்பதோர்வித மாத லிபிகளும் – வெகுரூப



அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானும் நிலவொடு –
வெயில் காலும்
சந்திர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது –
சிவயோகம்

என வரும் திருப்புகழை ஆராய்க. எல்லாமாய் விளங்குஞ் செம்பொருட்குப் பிறப்பேது? இறப்பேது?

‘புராணத்தில் முருகன் தோற்றம் கூறப்பட்டிருக்கிறதே, அஃதென்னை?’ என்று சிலர் ஐயுறலாம். புராணம் கூறும் முருகன் தோற்ற வரலாறும், ‘அவன் இயற்கை முதல்வன்’ என்பதை வலியுறுத்தவே எழுந்ததென்க. இதை ஆராயின் உண்மை காணலாம்.

முருகன், சிவபெருமான் திருக்கண்களினின்றுந் தோன்றி, காற்றாலும் [வாயுவாலும்] நெருப்பாலும் [அக்கினியாலும்] தாங்கப் பெற்று, நாணற் [சரவணப்] பொய்கையில் குழந்தையாய், மண்ணில் [பூமியில்] திரு விளையாடல் புரிந்தான் என்று புராணங் கூறுகிறது. இதனை ஆராய்ந்தால், முருகன், மண் புனல் தீ வளி வெளி என்னும் ஐந்து பூதங்கட்குங் காரணன் என்பது புலனாகும். சிவம் - வெளி: வாயுவும் அக்கினியும் - முறையே காற்றுந் தீயும்; சரவணப் பொய்கை - புனல்: பூமி - மண். இவ்வுண்மை கண்ட கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்தில்,

‘ஒங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந்
தனதியல்பை உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோற் பல பொறியாய்ப்
பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
ளொளிபடர்ந்து தெளிநீர்ப் புக்கு
நீங்கிவிளை யாட்டயர்ந்து தணிகையமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்’

என்று முருகனைப் போற்றியிருப்பது கண்டு உன்னற்பாலது. இச் செய்யுட்கணுள்ள உள்ளுறை அறிஞர் கருத்தைக் கவரும். முருகப் பெருமான் இயற்கை முதல்வன் என்பதைக் கதை வாயிலாகப் புராணம் அறிவுறுத்தும் நுட்பத்தை ஞான நூல் துணைகொண்டு ஆராய்ந்து உணர வேண்டுவது அறிஞர் கடமை.

சிவபெருமானைத் தந்தையென்றும், உமையம்மையைத் தாயென்றும், முருகனைப் புதல்வனென்றுஞ் சொல்லப்படுவதும் புராணமுறை. இம்முறைபற்றி அன்பர்கள் பரம்பொருளைப் போற்றிவருவது நமது நாட்டு வழக்கத்தையொட்டியது. நாட்டுக் கல்வி அருகியுள்ள இந்நாளில் இவ்வழக்கின் பொருள் முதலியன மறைந்து கிடக்கின்றன. என் செய்வது?

['முருகன் அல்லது அழகு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது]



முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவாதிருந்தக் கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா — பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.



# அதிசயமனேகமுற்ற பழநிமலை.

(திரு. R. கல்யாணசுந்தரம்)

திருமுருகப் பெருமானது ஆறுபடைவீடுகளில் திருவாவினன்குடி ஸ்தலமாகிய பழநியின் மகிமை அளவிடற்கரியது. "பழம் நீ" (நீயே பழம்) என்று அம்மை பராசக்தியே முருகனைப் புகழ்ந்த சலம் அது. இதனாலேதான் 'பழம்' நீஎன்பது குறுகிப் 'பழநி' என இத்தலத்திற்குப் பெயர் வந்தது என்பர். இத்தலத்தின் பெருமைகளைப் பின்வரும் அருணகிரிநாதரின் வாக்கால் அறியலாம். படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர் தாள் முடிகின்றிலை [கந் அலங் 75], சிவமயமான நின் பழநி [திருப். 156], பதினொலகோர் புகழ் பழநி [திருப் 170]. காசியின் மீறிய பழநியங்கிரி [திருப். 194], அதிசய மனேக முற்ற பழநிமலை [திருப். 214], அமரர்க்கிறையே வணங்கிய பழநித் திருவாவினன் குடி [திருப் 110], அரிய புகழையமைத்த பெரிய பழநிமலை (188), மாதவர் வளர் பழநி (181)

இப்பழநியை "இடும்பன் பழநி" என்று அருணகிரிநாதர் (திருப். (430) குறிக்கின்றார். பழநிக்குச் "சிவகிரி" என்று பழைய பெயருண்டு என்பதையும், பழனிக்கும் இடும்பனுக்கும் சம்பந்தமுண்டு என்பதையும் கீழ்க்காணும் வரலாற்றால் அறியலாம்.

ஒருசமயம் அகத்தியர் தம்மைவணங்கிய இடும்பாசுரனை நோக்கி வடக்கே திருக் கேதாரத்துக்கு அருகே இருந்த சிவகிரி, சக்திகிரி என்னும் இரண்டு மலைகளையும் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். இடும்பனும் அப்படியே வடக்கே சென்றான். அகத்தியர் உணர்த்திய மந்திர சக்தியால் பிரமதண்டம் தோளுக்குத் தடியாகவும், அஷ்டநாகங்களும் கயிறாகவும் இடும்பன் முன்னிலையில் தோன்ற அவன் அகத்தியர் குறித்த அந்த இரண்டு மலைகளையும் காவடிபோலக் கட்டித் தூக்கித் தெற்கு நோக்கி வந்தான். வரும்போது ஆவினன் குடியில் அந்த இரண்டுமலைகளையும் இறக்கி இளைப்பாறினான். பின்னர் எடுக்கமுயன்றபோது அவனால் எடுக்கமுடியவில்லை. ஏனென்று அவன் பார்த்தபோது சிவகிரியின் மீது அழகு பொலியும் ஒரு சிறுவர் இருக்கக் கண்டான். அச்சிறுவர் தாம்

தம் தந்தை தருவதாகச்சொன்ன பழம் பெறும்பொருட்டு உலகை மயில்மீது ஏறி ஒரு நொடியில் வலம்வந்து, அதற்குள் தந்தையார் தமையனுக்குக் கனியைக்கொடுத்துவிட்டதைப்பார்த்து, வெகுண்டு "படியிற் பெருமித தகவுயர் செம்பொற் கிரியைத் தனிவலம்வர அரனந்தப் பலனைக் கரி முகன் வசமருளும் பொற்பதனாலே-பரன் வெட்கிடவுளமிகவும் வெகுண்டக் கனியைத் தாவிலையென". 'பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாள்' என்பர். (திருப். 117) அதாவது இடும்பன் வைத்த அச்சிவகிரிமீது புவியில் வந்து நின்ற பெருமாள் ஆவர். அச்சிறுவரைத்தான் பரமனும் பார்வதியும் அங்குவந்து 'பழம் நீயே ஆதலின் உனக்கு வேறு பழமும் வேண்டுமோ' என அவருக்கு ஆறுதல் கூறினமையால்தான் அச்சிவகிரியும் 'பழநி' என்று பெயர்பெற்றது. தான்வைத்தமலைமீது நிற்கக் கண்ட சிறுவரை இடும்பனும் அம்மலையை விட்டுப்போகச் சொன்னான். சிறுவராம் முருகவேளும் 'இஃது எமதிருக்கை; யாம் போகோம்' என மறுத்தனர். இடும்பன் கோபித்து அந்தச் சிறுவர்மேற் பாய்ந்தான். பாய்ந்தவன் தடாலென வீழ்ந்து மூர்ச்சையானான். இந்நிகழ்ச்சியை அறிந்த அகத்தியர் அங்குவந்து ஆண்டவனை வணங்கினார்; ஆண்டவரும் இடும்பனை எழுப்பினார்; அவனுக்குக் காட்சியும் அளித்தார். தன்னைப்போலக் காவடிகொண்டுவரும் அடியவர்க்கு அவர்கள் வேண்டிய வரங்களை அளித்தருள வேண்டும் என இடும்பனும் இறைவரிடம் விண்ணப்பித்தான். 'அங்ஙனமே ஆகுக' என அண்ணல் அருள் புரிந்தார். இப்பழநிமலையில் இடும்பன் சந்நிதியும் உள்ளது. இப்படியாக முதல் முதல் இடும்பனால் துவக்கி வைக்கப்பட்ட காவடி எடுக்கும் வழக்கம் இன்றும் நிகழ்ந்து வருகிறது. அதனால் 'காவடிப்பிரியர்' என்றே முருகனும் அடியார்கள்முன் காணலானார். இடும்பன் வைத்தசக்திகிரியும் பழநிக்கருகில் இப்போதும் காணப்படுகிறது.

இவ்வாறு இடும்பனாலும், அகத்தியராலும், பலதேவர்களாலும் வழிபடப்பெற்று, 'வையாபுரி' 'ஷண்முகநதி' முதலிய தீர்த்தங்களோடு விளங்கும் சிவகிரியாம் பழநி மலையில் மகாசித்த புருஷராகிய போகரின்பேரருள் உலவிவருகிறது. பழநியிலுள்ள மூலவிக்கிரகத்திற்கும் ஏனைய தலங்களிலுள்ள விக்கிரகங்களுக்கும் வித்தியாசமுண்டு. இதர தலங்களில் உள்ள விக்கிரகங்கள் கற்களில் செதுக்கப்பெற்றவை. ஆனால் பழநியில் உள்ள விக்கிர



கமோ நவ பாஷாணங்களினாலும் வீர மெழுகினாலும் போகரால் நிர்மாணிக்கப்பட்டது. போகர் சித்தினால் இம்மாதிரிச் சிலைகள்பல நிர்மாணிக்கப் பெற்றிருப்பதாகவும், இப்போது இருக்கும் சிலை நான்காவது என்றும். சுமார் 70 வருஷங்களுக்கு முன் இருந்தசிலை மலினமாக இருந்ததால் அதைப் புதுப்பிக்க ஒரு கருங்கல் விக்கிரகம் செய்வித்துக் கும்பாபிஷேகம் செய்யப் பொது ஜனங்கள் எத்தனித்ததாகவும் அவ்வமயம் ஒரு பக்தர் கனவில் கருங்கல் சிலை கூடாது என்றும். வேறு விக்கிரகம் இருக்கும் மலையையும் இடத்தையும் சுட்டிக்காட்டி இங்கு இத்தனை அடி அழம் தோண்டினால் சிலை அகப்படும் என்றும் அதையே பிரதிஷ்டை செய்யவேண்டுமென்றும் உத்தரவளித்ததாகவும், அங்ஙனம் கிடைத்த சிலையே தற்சமயம் விளங்கிவரும் பழநி ஆண்டவரின் சிலை என்றும் சொல்லப்படுகின்றது. ஆகையால்தான் இவ்விக்கிரகத்திற்குச் சதாகாலமும் தேனபிஷேகம் செய்துகொண்டிருந்தால் பின்னம் ஏற்படும். இதற்குமாற்றாக உடனே இளநீர் அபிஷேகம் செய்யவேண்டும் இவ்வுண்மையை விளக்க ஓர் வதந்தி உண்டு. திருப்பதிக்கருகிலுள்ள ஒருவர் தம்கொடிய குன்மநோய் தீர்ந்தால் திருப்பதி வேங்கடாசலபதிக்கு ஒருகுடம் ஸ்வயத்தேன் அபிஷேகம் செய்விப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டாராம் நோய் நீங்கவே பிரார்த்தனை செலுத்துவதற்குத் தேன் குடத்துடன் திருப்பதிமலை ஏறும்போது வேறொருவருக்கு ஆவேசம் வந்தது. "தேனுக்கு உகந்தவன் பழனியில் குமரன் இருக்கிறான் அங்குச்செல்" என்றதும் அவ்வாறே அவரும் பழநி சென்று அபிஷேகம் செய்தனராம்.

...O...

"வள்ளிமலை வள்ளல்" என்னும் நாலிலிருந்து எடுக்கப்பட்டது.
அதின் விலை ரூபா 2.50.

கிடைக்குமிடம்:- 2, வடக்கு, கோபலபுரம்,
இரண்டாந்தெரு, சென்னை.

# கருணைமழை பொழிதெய்வம்

[முத்து]

மழை எங்கும் பெய்கின்றது. நல்லோர் என்றோ தீயோர் என்றோ அதுபார்ப்பதில்லை. பாறை என்றோ மண்என்றோ அதற்கு வித்தியாசம் கிடையாது. பண்படுத்தப்பட்ட மண்ணில் மழை சேரும்போது மண் மழையைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றது. பாறையில் விழும்நீரைப் பாறை திரும்பியும் பார்ப்பதில்லை. இறைவன் கருணையே மழையாகப் பொழிந்தும்கல், கல்லாகவே இருக்கின்றது.

இதேபோன்று இறைவன்கருணை எல்லார்க்கும் எக்காலத்தும் ஒரேமாதிரியாகக்கிடைத்துக்கொண்டே இருக்கின்றது. அதனைப் பயன்படுத்துவோர் மகான்கள் ஆகின்றனர்; அருள்பெற்ற திருவருட் செல்வராகின்றனர். பயன்படுத்தாதோர் பாவிகள் ஆகின்றனர். இவர்களைப்பார்த்துத்தான் அருணகிரியார் நெஞ்சக்கனகல்லுப்பெற்றவர் என அழைக்கின்றார். கல்லிலே விழுந்த மழைநீர் தெறித்து விழுந்து ஓடிச் சேர்ந்ததுபோல நெஞ்சக்கனகல்லில் விழுந்த ஆண்டவன் கருணையும் வழிந்தோடிவிடுகின்றது.

கலியுகத்தில் மனிதனுக்கு ஆண்டவனை ஆழ்ந்து தியானிக்க நேரமில்லை. மனிதனால் முடிவதுமில்லை. வேகத்திலே அடிபட்டு அலைகின்றான். இத்தகைய மனிதன் கடைத்தேற ஆண்டவன்கருணை பாலித்துள்ளான். ஒருகால் முருகா என்று உணர்ந்து ஓதினால் இருகாலுந்தோன்ற அடியார் உளத்தில்தோன்றுகின்றான் முருகன் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் என்று கூறுவர் அன்பர்கள். அன்பர்களின் இதயத்தி துரியமலைமேல்உள்ளே விளங்குவது சுப்ரஹ்மண்யம் அனுலும் குன்றுதோறும் குமரனுக்குப் பாரதத்தாய் விசேடமாக ஆறுபடைவீடுகளை அருளியிருக்கின்றாள். ஒவ்வோரிடத்திலும் குமரன்திருவிளையாடல் ஒவ்வொருவிதத்தில் அழகு பெற்றுப் பொலிகிறது. இவைகளிலும் பார்க்கத் தனிச்சிறப்பினைப் பெற்று விளங்குவது ஈழ நாட்டின் தென்பாலுள்ள கதிர்காமம். ஈழமண்டலச் சிறப்பைப்பற்றிக் கூறவந்த ஆசிரியர் ஒருவர்,



காந்திசேர்கண் இலாதவர்க்குக் கண்ணும்
காட்சியும் தந்து சூர்ப்பகைச் செவ்வேள்
ஏந்தல் சேர்கதி ராபுரி சேர்ந்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே

எனக் கதிர்காமத்தைச் சிறப்பிக்கின்றனர். ஞானக்கண்ணையும் அறிவையும் கதிர்காம முருகன் தனது அன்பர்களுக்குக் கொடுத்து தன்னை அவர்களுக்குக் காட்டுகின்றானும். கதிர்காமத்தில் முருகன் சோதிமயமாகத் திகழுகிறான் என்பது அன்பர்களின் அபிப்பிராயம். கதிர் — ஒளி; காமம் - விருப்பம், கதிரைக் குமரன் தன்னை விரும்பி வந்தோருக்குச் சோதிப்பிளம்பாய்க்காட்சி கொடுக்கிறான் என்பதே கதிர்காமம் என்பதற்கு ஞானக்கருத்தாகும்.

உலகிலுள்ள மனிதர்கள் யாவரும் இன்பத்தை அடையவே விரும்புகின்றனர். இன்பம் எங்கே உண்டு? இன்பம் உள்ளத்தில் உள்ளது. உள்ளம் சாந்தி அடையும்போது அதுவே பேரின்பம். சாந்தியடைவதற்கு மார்க்கமென்ன? இறைவனது பாதங்களையடைதல். இதனால்தான் வள்ளுவரும் கல்வியின்பயன் வாலறிவன் நற்றாள் தொழுதல் என்றார். மனம் எந்தநேரமும் அலையுந்தன்மையது. செக்கனுக்குச் செக்கன் தாவிப்பாய்ந்து கொண்டே இருக்கும். இத்தகையமனம் அடங்குவதற்கு உபாயம் முருக நாமமே. முருகநாமத்தில் வாயைப்பழக்கி அதன் மூலம் மனதை நிலைக்கச் செய்துவிட்டால் சாந்தி நிலைதானேகிட்டும். இதனைமுருகன் அடியார் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

உன்பாத மலரன்றி உபசாந்த நிலைதருதற்
குற்றதுணை பிறிதொன்றில்லை
உன்நாம ஜெபமன்றி உழல்மன மடங்கிட
உபாயமது வேறொன்றிலை.

சாதனையின்றேல் சாத்தியமில்லை என்பார்கள். இலௌகிககருமங்களில் வெற்றி பெறுவதற்குக்கூட சாதனை எத்தனை அவசியம் என்பதை அறிவோம். பாக்குநீரிணையை நீந்திக் கரைசேர்ந்த **நவரத்தினசாமி** 30 ஆண்டுகளாகச் சாதனை செய்தாராம். அப்படியாயின் ஆத்மீக வெற்றி கிட்டவேண்டுமாயின் ஒருபிறப்பிலுள்ள சாதனைமாத்திரம்காணாது. எத்தனையோபிறப்புகளில் சாதனைபுரிய

வேண்டி உள்ளது. இதனால்தான் வள்ளுவரும் "தவமுந்தவ முடையார்க்காகும்" என்றார். ஆத்மீக சாதனைகள் பலப்பலவாக விரிந்து கிடக்கின்றன. அவையெல்லாவற்றுள்ளும் மிகச்சுலபமான சாதனை சத்சங்கமாகும். அதாவது நல்லோர் கூட்டுறவாகும். "நல்லாரைக் காண்பதுவும்நன்றே", "ஒருமையுடன் நினதுதிருமலரடி யிணைநினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும்" என்பனபோன்ற வாக்குகள் நல்லோர்கூட்டுறவின்பயனை விளக்குகின்றன. ஒருவனுடைய தாபந்தீரவேண்டுமாயின் சந்திரனைநாடிப் போகவேண்டியுளது. வறுமை ஒழிவதற்குக் கற்பகத்தை நாடிச் செல்லவேண்டியுளது. பாபம் ஒழிவதற்குக் கங்கையைநாடிப் போகவேண்டி உளது. ஒரு உத்தமருடைய சந்நிதானத்தில் மேற்கூறிய மூன்று நன்மைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

"அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்று மணிவாசகப்பெருமான் கூறுகின்றார். அவன்தாள் வணங்குவதற்கே அவன் அருள் வேண்டி உள்ளது. அப்படியாயின் எமது கவலைதீர்வதற்கு அவனருள் தவறாது வேண்டும் என்பது பெறக்கிடக்கின்றதல்லவா? உண்மை. இதில் சந்தேகம் எதுவுமே இல்லை அண்டவனுடைய அடியார்கள் அநுபவத்தில் கண்ட உண்மையாகும்.

உன்னன்ப குறவன்றி உள்ளம் குவிந்திட
உயர்ந்த சாதனையு மில்லை
உன்கருணை யில்லையேல் என்கவலை தீராது
உண்மை இதில் ஐயமில்லை

முருகனுக்குப் பன்னிருகண்கள் இருக்கின்றன. இறைவனுடைய திரு உருவங்களுக்கு நான்குகைகள் அமைத்திருப்பார்கள். இறைவனின் வல்லமையைச் சாமானிய சனங்களுக்கு விளங்கச்செய்வதற்காகவே அப்படி அமைத்தல் மரபு. கருணையின் விளக்கமே கண்ணாகும். பன்னிரு கண்களைப்பெற்ற முருகன் எங்கள்மேல் கொண்டுள்ள கருணையை விளங்கச் செய்வதற்காகவே பன்னிரு கண்ணுடையான் எனப்பாராட்டினர் பக்தர்கள். அப்பார்வை எமது பழவினை எல்லாம் களைந்திடுமாம். பிறவிப்பிணிக்கு அதுவே மருந்துமாகும். பன்னிருகண்களைப் படைத்த கருணையின் உருவான முருகா! நீ என்னைப் பாராமுகஞ்செய்துவிட்டால் உனது அடியார்கள் ஏசுவார்களே! படித்த பண்டிதர்கள்கூடப் பழிகூறுவார்



களே. நான் இப்படிக்கஷ்டப்பட்டால் இனிமேல் என்னைப்பார்த்து புது அடியார்கள் ஒருவரும் உன்னைநாடி வரமாட்டார்களே என்று முறையிடுகின்றார் பக்தர்.

பன்னிருகண் பார்வையே பழவினை களைந்திடும்
பரமஔ டதமுமாகும்
பாராமுகஞ் செய்திடில் பக்தரும் ஏசுவார்
பண்டிதரும் பழிகூறுவார்

முருகன் இச்சையுங் கிரியையும் இருமருங்கிருக்கக் காட்சி கொடுக்கிறான். அப்பன் மனமிரங்காவிடில் அன்னையாவது மனமிரங்குவாளல்லவா? பெற்றமனம்பித்து என்றல்லவா பெரியோர் கூறிச்சென்றனர். சம்பந்தர்குழந்தைக்கு அன்னையார் வந்துதானே ஞானப்பால் ஊட்டினார். ஒரு அன்னையாருக்குப் பதிலாக இரு அன்னையார் இருந்தும் நின்மனம் இரங்காவிடில் என்னிலைதான் என்னவது? இத்தகைய திருக்கோலத்தில் கதிர்காமக்ஷேத்திரந்தனிலமர்ந்து அன்பர்களுக்குக் கருணைமழைபொழியும் கதிர்காமத்தையனே மனமிரங்குவீராக. இப்போ பக்தரின்முறையீட்டை அவர் வாக்காலேயே படித்து உணருங்கள்.

உன்பாத மலரன்றி உபாசிந்த நிலைதரு தற்
கூற்றதுணை பிறிதொன்றிலை
உன் நாம ஜெபமன்றி உழல்மன மடங்கிட
உபாயமது வேறொன்றிலை

உன்னன்ப குறவன்றி உள்ளங் குவிந்திட
உயர்ந்த சாதனையுமில்லை
உன் கருணை யில்லையேல் என்கவலை தீராது
உண்மை இதில் ஐயமில்லை

பன்னிருகண் பார்வையே பழவினை களைந்திடும்
பரமஔ டதமுமாகும்
பாராமுகஞ் செய்திடில் பக்தரும் ஏசுவார்
பண்டிதரும் பழிகூறுவார்

கன்னியர்க ளிருவருடன் காட்சிதந் தெனையாளக்
கடாட்சம்வைத் தருளல்வேண்டும்
கதிர்காம க்ஷேத்திரந் தனிலமர்ந் தன்பர்க்குக்
கருணைமழை பொழிதெய்வமே!

# பாரதி மணிமலர்

—※—

வெளியீடு:- பாரதி இளைஞர் சங்கம்.
பதிப்பாசிரியர்:- நயமணி கல்கிதாசன்.
விலாசம்:- 43, மாளிகாகந்தவீதி, கொழும்பு-10
விலை:- ரூபாய் 1/25.

**பாரதி இளைஞர்சங்கத்தின்** அரும் பெரும் முயற்சியால் உருவானது **பாரதிமணி மலராகும்.** பாரதிவிழாக் கொண்டாடுபவர்கள் பாரதியாரின் அமரதினத்தையே கொண்டாடுவது வழக்கம். பாரதி இளைஞர்சங்கத்தாரோ என்றால் பாரதியாரின் பிறந்தநாளையே கொண்டாடி வழக்கப்படுத்திக் கொண்டார்கள். பாரதியாரின் பிறந்தநாளிலே பிறந்த மணிமலருக்குத் தமிழ்நாட்டிலே உள்ள ஆத்மீகப் பெரியார்கள் அத்தனைபேரும் ஆசியும் கட்டுரையும் அளித்துள்ளார்கள். பாரதிபக்தர்கள் அத்தனை பேருக்கும் **மலர்** ஒரு பெருவிருந்தாகும்.

**வாழியசெந்தமிழ்! வாழ்கநற்றமிழர்!!**

# சைவசமய புண்ணியகாலம்.

ஆக்கியோன்:-
பண்டிதர். த. சுப்பிரமணியம்
"பாக்கியவாசம்" சித்தங்கேணி, [சிலோன்]

விலை ரூபா. 1/50.

மனிதன் முக்குணவசப்பட்டு நேரத்திற்கு நேரம் அல்லல்படுகின்றான். மக்கள்யாவரும் சாத்விகநிலையில் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பதற்காகவே சமயசாதனைகள் பல எழுந்தன. பண்டிதரும் பாமரரும் பயன்படத் தக்கவகையில் மாதந்தோறும் பல புண்ணியகாலங்களை-விசேடதிருநாட்களை - விரதநாட்களை நம்முன்னோர் வகுத்துச் சென்றனர். பரம்பரை பரம்பரையாக அவை வழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன. மக்களிடையே சமயஉணர்ச்சி அருகிய காலத்து இச்சமயதினங்கள் எல்லாம் எதற்கு என்றொரு கேள்வி எழுந்தது? இத்திருநாட்களின் உட்பொருளை அறியாதார் பிராமணர்மேல் பழியைப்போட்டுச் சமயத்தைப்பற்றி பலவாறு பிரச்சாரம்செய்யத் தொடங்கினர். பரம்பரையாக அநுட்டித்து வந்தவர்கள்கூட நம்பிக்கையில் அநுட்டித்தார்களே தவிர பலருக்கு உட்பொருள்விளங்காமலிருந்தது. இதனால் இளஞ்சிறுருடைய உள்ளம் சமாதானம் அடையவில்லை. எதிர்ப்பக்கத்தாருடைய பிரச்சாரம் சிறார் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. இதனால் இளைஞர்கள் ஆலயங்கள் ஏனையா? அபிஷேகங்கள் ஏனையா? கல்லிலும் செம்பிலுமோ கடவுள் இருக்கின்றார்? மனிதனைக் கடவுள் படைத்தாரா? மனிதன் கடவுளைப் படைத்தானா? என்றின்னவாறு கேள்விமேற் கேள்விகள் போடுகின்றனர். இளைஞரின் அறிவுப் பசிக்குத்தகுந்த உணவு கிடைக்கவில்லை எனவே நியாயந் தெரியாத அநுட்டானங்கள் எல்லாம் விழல் எனப் பிதற்றத் தொடங்கினர்.

இந்நூலாசிரியர் நாம் நாளாந்தம் அநுட்டிக்கும் சமயச் சடங்குகள்யாவற்றுக்கும் ஓரளவு காரணகாரியமுறைப்படி விளக்கங்காணமுற்பட்டிருக்கிறார். இளஞ்சிறுருக்கும் மற்றையோருக்கும் ஓரளவு சமய உண்மைகளை விளக்க முற்பட்டுள்ளது இந்நூல். அன்பர்கள் யாவரும் ஆதரித்துப் போற்றுவார்களாக.

**நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
என்றுஞ் சிவன்றா ளிணை.**

Regd, at the G. P. O. as a News Paper M. L. 59/006


## வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு, முழங்கால்வாய்வு, இடுப்புவாய்வு, மலக்கட்டு, மலபந்தம். அஜீரணம், கைகால் அசதி-பிடிப்பு, பசியின்மை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக்கரிப்பு முதலான வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

**உபயோகிக்கும் முறை;**-இந்தச் சூரணத்தில் ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை, மாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அநுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய் நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

**மூலிகையினால் தயாரிக்கப்பெற்றது.**

தபாற்செலவு உட்பட டின் ஒன்று 3 ரூபா 75 சதம்.

[பத்தியமில்லை]

**சம்பு இன்டஸ்ரீஸ். சேலம் 2. (S. I.)**

**இலங்கையில் கிடைக்குமிடம்;**

**ஆத்மஜோதி நிலையம், ::: நாவலப்பிட்டி.**

## ஞானமாலை.

சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் திருவண்ணாமலை விருபாக்ஷி குகையில் ஞானசித்தி பெற்றுப் பாடியது. ஒவ்வொருநாளும் பத்துப் பாட்டுப் பாடி பகவான் ரமணரிஷிகளுக்கு நிவேதித்து வந்தார். மகரிஷிகள் இந்தப் பாடல்களில் மிக்க மகிழ்ச்சியடைந்து இன்னும் இந்தமாதிரிப் பாடுவதற்கு ஊக்கினார். ஆத்மஜோதி சங்கரின் மணிவிழா, ஞாபகார்த்தமாக வெளியிடப்பெற்றது. வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கு 51 சத முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகமொன்றின் விலை 50 சதமாகும்

25 புத்தகத்துக்குமேல் பெற்றுக்கொள்வோருக்கு 20 வீதம் கழிவுகொடுக்கப்படும்.

**சக்தி அன் கோ., 35, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.**


Hony, Editor; K. Ramachandra

Printed & Published by N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya

At Saravana Press, Nawalapitiya 17 8 57